[1975 மார்ச் 6

ஆலயத் தேர்கள் விற்பனை

* 217 வினா—திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

ஆலயங்கள் எவையேனும் தங்களிடம் உள்ள புராதன தேர்களை விற்பனை செய்ய முன்வந்ததா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : இல்லை.

திரு. கு. இராசமாணிக்கம் : இக்கால நிலையை அனுசரித்து தேர் திருவிழாக்களுக்குச் செலவு செய்கிற பணத்தை கல்விக்காகச் செலவழிக்கத் திட்டம் இருக்கிறதா?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : கல்விக்கும் செலவிடுகிறோம். அதே நேரத்தில் இந்தத் தேவையையும் பூர்த்தி செய்கிற வகையில் இரண்டு காரியங்களையும் அறநிலையத் துறை மூலம் செய்கிறோம்.

Jersey Farm at Hosur.

* Q.218.—THIRU B. VENKATASWAMY : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state :

(*a*) whether there is any proposal to start a pure Jersey Farm at Hosur Cattle Farm with the British Collaboration; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : (அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

THIRU B. VENKATASWAMY : I am given to understand that there is a collaboration to import pure jersey bulls from England to Hosur Cattle farm under the Dairy Development Corporation. May I know from the hon. Minister whether such a scheme is going to materialise soon?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த கால்நடை வல்லுநர் ஹோசூர் பகுதியைப் பார்வையிட்ட பிறகு ஃப்ரோசன் செமன் என்ற வகையில், உறை விந்து பிரிவிடம் கூடிய கால்நடை நிலையத்தைத் தொடங்கும் திட்டத்தைக் கொடுத்திருக்கிறார்கள். விரைவில் அதனைத் தொடங்கவேண்டுமென்று

1975 மார்ச் 6]

பிரிட்டிஷ் அரசாங்கத்தோடு இந்திய அரசாங்கம் பேச்சு வார்த்தை நடத்தி வருகிறது. அந்தப் பேச்சு வார்த்தை வெற்றிகரமாக முடியுமானால் நிச்சயமாகப் பலன் ஏற்பட்டு தொடங்க முடியும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

கும்முடிப்பூண்டி, எல்லாபுரம் ஒன்றியங்களில் அரிசனங்களுக்கு வீட்டு மனைகள்

* 219 வினா—திரு. கா. வேழவேந்தன் : மாண்புமிகு அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கும்முடிப்பூண்டி ஊராட்சி ஒன்றியத்திலும், எல்லாபுரம் ஊராட்சி ஒன்றியத்திலும் எந்தெந்த அரிசன காலனிகளில், வீட்டு மனைகளை ஆர்ஜிதம் செய்து குடிமனைப் பட்டாக்கள் வழங்கும் செயற் குறிப்புகள் ஆய்வில் உள்ளன?

(இ) அவற்றை நிறைவேற்றுவதில் ஏற்படும் காலதாமதத்திற்கான காரணங்கள் யாவை?

மாண்புமிகு திரு. என். இராஜாங்கம் : (அ) & (இ) ஓர் அறிக்கை @ சட்டப் பேரவையின் முன் வைக்கப்பட்டுள்ளது.

திரு. கா. வேழவேந்தன் : இந்த விவர அறிக்கையிலே உள்ள சில விவரங்களைப் பார்க்கும்போது சில ஊர்களிலே இந்த நில ஆர்ஜிதம் செய்கிற பிரச்சினை ஆண்டுக் கணக்கில் காலதாமதமாகிக் கொண்டிருக்கிறது என்றும் அதற்குக் காரணமாக, போதிய நிதி கொடுக்க வேண்டுமென்றும், வட்டத்திற்கு ஒரு ஸ்பெஷல் ரெவின்யூ இன்ஸ்பெக்டர் நியமிக்கப்பட்டு இன்ஸ்பெக்ஷன் போன்றவற்றைச் செய்து முடிக்க வேண்டுமென்றும் இரண்டு காரணங்கள் சொல்லப்படுகின்றன. இந்த இரண்டையும் நிறைவேற்றி விரைவாக இந்தப் பணியை முடித்துக் கொடுக்க அரசு தனி ஆணை பிறப்பிக்குமா?

மாண்புமிகு திரு. என். இராஜாங்கம் : தனி அதிகாரிகளைப் போட அரசு ஆலோசித்து வருகிறது. அடுத்த ஆண்டிலிருந்து தீவிரமாகச் செயல்படும்.

@ 132–134 ம் பக்கங்களில் இணைப்பு IV ஆக அச்சிடப்பட்டுள்ளது.